# பெரியாழ்வார் திருமொழி 3-3
## சீலைக்குதம்பை
(கண்ணன் கன்றுகள் மேய்த்து வரக் கண்டு யசோதை மகிழ்தல்)

244 * சீலைக்குதம்பை ஒரு காது * ஒரு காது செந்நிற மேல்
தோன்றிப் பூ *
கோலப்பணைக் கச்சும் கூறை உடையும் * குளிர் முத்தின்
கோடாலமும் **
காலிப் பின்னே வருகின்ற * கடல்வண்ணன் வேடத்தை வந்து
காணீர் *
ஞாலத்துப் புத்திரனைப் பெற்றார் * நங்கைமீர் நானே
மற்றாருமில்லை (1)

245 கன்னி நன்மா மதிள்சூழ் தரு * பூம்பொழில் காவிரித்
தென்னரங்கம் *
மன்னிய சீர் மதுசூதனா * கேசவா பாவியேன் வாழ்வுகந்து **
உன்னை இளங்கன்று மேய்க்கச் * சிறுகாலே ஊட்டி
ஒருப்படுத்தேன் *
என்னின் மனம் வலியாள் ஒரு பெண் இல்லை * என் குட்டனே
முத்தம் தா (2)

246 காடுகளூடு போய்க் * கன்றுகள் மேய்த்து மறியோடி *
கார்க்கோடல் பூச்
சூடி வருகின்ற தாமோதரா * கற்றுத் தூளி காண் உன்
உடம்பு **
பேடை மயில் சாயற் பின்னை மணாளா * நீராட்டமைத்து
வைத்தேன் *
ஆடி அமுதுசெய் அப்பனுமுண்டிலன் * உன்னோடு
உடனேயுண்பான் (3)

247 கடியார் பொழிலணி வேங்கடவா * கரும் போரேறே * நீ
உகக்கும்
குடையும் செருப்பும் குழலும் தருவிக்கக் * கொள்ளாதே
போனாய் மாலே **
கடிய வெங்கானிடைக் கன்றின் பின் போன * சிறுக் குட்டச்
செங்கமல
அடியும் வெதும்பி * உன் கண்கள் சிவந்தாய் அசைந்திட்டாய் *
நீ எம்பிரான் (4)

248 பற்றார் நடுங்க முன் பாஞ்சசன்னியத்தை * வாய் வைத்த
போரேறே *
என் சிற்றாயர் சிங்கமே சீதை மணாளா * சிறுக் குட்டச்
செங்கண்மாலே **
சிற்றாடையும் சிறுப் பத்திரமும் * இவை கட்டிலின் மேல்
வைத்துப் போய் *
கற்றாயரோடு நீ கன்றுகள் மேய்த்துக் * கலந்துடன் வந்தாய்
போலும் (5)

249 அஞ்சுடராழி உன் கையகத்தேந்தும் * அழகா நீ பொய்கை
புக்கு *
நஞ்சுமிழ் நாகத்தினோடு பிணங்கவும் * நான் உயிர்
வாழ்ந்திருந்தேன் **
என் செய்ய என்னை வயிறு மறுக்கினாய் * ஏதுமோர்
அச்சமில்லை *
கஞ்சன் மனத்துக்கு உகப்பனவே செய்தாய் * காயாம்பூ
வண்ணம் கொண்டாய் (6)

250 பன்றியும் ஆமையும் மீனமும் ஆகிய * பாற்கடல் வண்ணா
உன் மேல் *
கன்றின் உருவாகி மேய்புலத்தே வந்த * கள்ள அசுரன்
தன்னை **
சென்று பிடித்துச் சிறுக் கைகளாலே * விளங்கா எறிந்தாய்
போலும் *
என்றும் என் பிள்ளைக்குத் தீமைகள் செய்வார்கள் * அங்ஙனம்
ஆவர்களே (7)

251 கேட்டறியாதன கேட்கின்றேன் * கேசவா கோவலர் இந்திரற்கு *
கட்டிய சோறும் கறியும் தயிரும் * கலந்துடன் உண்டாய்
போலும் **
ஊட்டமுதலிலேன் உன் தன்னைக் கொண்டு * ஒரு போதும்
எனக்கரிது *
வாட்டமிலாப் புகழ் வாசுதேவா * உன்னை அஞ்சுவன் இன்று
தொட்டும் (8)

252 திண்ணார் வெண்சங்குடையாய் * திருநாள் திருவோணம்
இன்றேழு நாள் * முன்
பண்ணேர் மொழியாரைக் கூவி முளையட்டிப் * பல்லாண்டு
கூறுவித்தேன் **

கண்ணாலம் செய்யக் * கறியும் கலத்ததரிசியும் ஆக்கி
வைத்தேன் *
கண்ணா நீ நாளைத் தொட்டுக் கன்றின் பின் போகேல் *
கோலம் செய்திங்கே இரு (9)

253 * புற்றரவல்குல் அசோதை நல்லாய்ச்சி * தன் புத்திரன்
கோவிந்தனை *
கற்றினம் மேய்த்து வரக் கண்டுகந்து * அவள் கற்பித்த
மாற்றமெல்லாம் **
செற்றமிலாதவர் வாழ்தரு * தென்புதுவை விட்டுசித்தன்
சொல் *
கற்றிவை பாட வல்லார் * கடல்வண்ணன் கழலிணை
காண்பர்களே (10)